சுலபமாக சன்னிதானத்தை அடையும் வழி. இங்கிருந்து ஐயப்பன் ஆலயம் 25 மைல் தொலைவில் அமைந்துள்ளது. ஐயனின் தரிசனம்பெற்றுத் திரும்பும் மடக்கு யாத்திரைக்கே இவ்வழி பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

### மோகினி அவதாரம்

தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்த போது அசுரர்களை மயக்கித் தேவர்க்கு நலம் செய்ய விஷ்ணு எடுத்த அவதாரம். பஸ்மாசுரன் தவத்தில் பெற்ற வரத்துக்கு அஞ்சி ஓடிய சிவபெருமானைக் காப்பாற்ற, பஸ்மாசுரன் பெற்ற வரத்தையே அவன் அழிவுக்குப் பயன்படுத்திய அவதாரம். தாருகாவனத்து முனிவர்களின் அகந்தை நீக்கத்தினைக் கருதிப் பிட்சாடனருடன் வந்த அவதாரம். இம்மோகினி அவதாரம் சிவத்துடன் இசைந்து பெற்ற அமுதசுரபியே தர்மசாஸ்தா; தர்ம சாஸ்தாவின் அவதாரமே மணிகண்டனாகிய ஐயப்பன்.

## ர

### ராஜ சேகரன்

பந்தள மன்னர். சிவ பக்தர். குழந்தை பாக்கியம் வேண்டி முக்கண்ணனை வணங்கிய போது, இறைவன் அருளால் தர்ம சாஸ்தாவான ஸ்ரீ ஐயப்பன் மன்னனின் வளர்ப்பு மகனானார். காட்டில் வேட்டையாடச் சென்றபோது கழுத்தில் மணிமாலையுடன் அழுது கொண்டிருந்த குழந்தையை மணிகண்டன் என பெயரிட்டு அரண்மனைக்கு எடுத்து வந்து வளர்த்தார். மகாராணியின் தலைவலிக்காக மணிகண்டன் புலிப்பாலுடன், புலிக் கூட்டத்தையே கொண்டு வந்த போது அதிசயித்தார். அகத்திய முனிவரின் அருளால் தர்ம சாஸ்தாவே மணிகண்டன் என உணர்ந்தார். தன் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் தர்ம சாஸ்தா கோவில் கொண்டருள வேண்டும் என வேண்டி நின்றார். பந்தள மன்னருக்கு ஐயன் தத்துவ உபதேசங்கள் வழங்கியருளினார். மணிகண்டன் அம்பெய்து காட்டிய இடத்தில் திருக்கோவில் அமைத்தார்.

## ல

### லீலா

சந்நிதானத்தில் மாளிகைப் புறத்தம்மன்தான் சுவாமி ஐயப்பனுக்கு அடுத்த முக்கிய வழிபாடு பெறும் விக்கிரகம். பிறப்பில் தெய்வீகம் இழந்து மீண்டும் தெய்வீகம் பெறும் ஆன்மீக பாடம் தாங்கிய வரலாறு அவளுடையது.

பிரமன், விஷ்ணு, சிவன் எனும் முத்தொழில் முதல்வர்கள் தத்தம் சக்தியில் சிறிதளவு அருளித் தத்தன் எனும் குழந்தையை உருவாக்கினர். அத்திரி-அநுசூயை எனும் முனிவர் தம்பதியர் விருப்பத்திற்கு ஏற்ப அவர்க்கு மகனாகப் பிறந்தான் தத்தன். மூவரின் தேவியரும் தத்தம் சக்தியில் சிறிது தந்து லீலா எனும் பெண்ணை உருவாக்கினர். அவள் மற்றொரு முனிவர் குடும்பத்தில் மகளானாள். லீலாவும், தத்தனும் வளர்ந்த பின் திருமணம் செய்து கொண்டனர். நெடுங்கால உலகியல் இன்பங்களைத் துய்த்துப் பின் இறை நாட்டங் கொண்டான் தத்தன். லீலாவின் இன்ப நாட்டம் அதனைத் தடுத்தது. தத்தன் லீலாவை மகிஷியாய் சபித்தான்; லீலா தத்தனை மகிஷமாகச் சபித்தாள். அப்போதும் அவள் நோக்கம் அவனுடன் இணைந்து இன்பமாக வாழும் எதிர்பார்ப்புத்தான். பல ஆண்டுகளுக்குப் பிறகு லீலா ஓர் அரக்கனின் மகளாகப் பிறந்து மகிஷியானாள். வரம் பல பெற்ற அவள் தேவர் உலகை அடக்கினாள். தேவலோகத்திலிருந்து மகிஷியை மண்ணுலகிற்கு அனுப்பும் பொருட்டு மூவரும் அழகிய மகிஷமாகத் தத்தனைப் பிறக்கச் செய்தனர். தேவருலகம் நீங்கி மண்ணில் அவர்கள் வாழ இத்திட்டம் உதவியது. நெடுங்காலம் இருவரும் இன்பம் துய்த்தனர். மகிஷி தேவருலகை இரண்டாம் முறையாகத் தாக்கியபோது ஐயப்பனால் வதம் செய்யப்பட்டாள். ஐயப்ப அவதார நோக்கம் நிறைவேறியது. அவளுடலிலிருந்து (இறக்கு முன்) அழகிய பெண்ணுருவம் வெளிப்பட்டது. அப்பெண்ணுருவினள் ஐயப்பனிடம் தனக்கு ஓர் இருப்பிடம் அருள வேண்டினாள். சந்நிதானம் அருகே மாளிகைப் புறத்தம்மன் எனும் பெயரில் அவள் எழுந்தருளினாள்.

லீலா-மகிஷி-மாளிகைப்புறத்தம்மன் எனும் நீட்சி ஓர் ஆன்மீக நுண் பார்வைக்குரிய செய்தியாகும்.

### மந்திரமாவது நீறு

இறை வழிபாடு செய்யும்போது நாம் அணியும் திரு நீற்றின் தத்துவம் அரும் பெரும் பொருள் படைத்தது:

- வெண்மை நிறம் சத்வ குணத்திற்கு அறிகுறி. எனவே நீறணிபவர்கள் அதை தரிக்கும் போதெல்லாம், நாம் சாத்வீக குணமுள்ளவர்களாக இருப்போம் என சங்கல்பம் செய்வதற்கு சமமாகும். சாத்வீக நிலையை அடைந்தவர்களே கடவுளை அடைய முடியும்.
- பசுவின் சாணத்தை சுட்டெரித்து திரு நீறு உருவாக்கப்படுகிறது. இதன் கருத்து என் மன அழுக்குகளை தெய்வ பக்தியால் சுட்டெரித்து, திருவெண்ணீறு போல் பரிசுத்தமடைந்து அதன் பயனுய் சிவத்தை அடைவேன் என்பது.
- எண் சாண் உடம்பிற்கு சிரேச பிரதானம் என்பர். எனவே உடலுறுப்புகளில் மேலான சிரசில் அமைந்த நெற்றியில் திருநீறு அணிவது சாலச் சிறந்தது.
- திருநீற்றை மூன்று விரலால் எடுத்து அண்ணுந்து முப்பட்டையாக நெற்றியில் பூச வேண்டும். இதன் கருத்து ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும் நீக்க வேண்டும் என்பதாகும்.

## வ

### வழி நடை வருத்தம்

சபரிமலை ஐயனைக் காண காடும் மேடும் கடந்து வர வேண்டும். இந்நடைப் பயணமே 'வழி நடை வருத்தம்' என்று அழைக்கப்படுகிறது. அறங்காக்கும் நாயகனைப் பேணுவோர் வழிநடை வருத்தம் பேண வேண்டும். இது ஒரு வாழ்வியல் பயிற்சி. மன உறுதிக்கு ஓர் அடையாளம்.

வழிநடைப்பயண இன்பத்தை சரண கோஷங்களால் மென்